**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண்: 15/பேரூ/2024**
**நாள்: 19.02.2025**

திரு. K.P. மணி
காசிபாளையம்
ஈரோடு மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அரியப்பம்பாளையம் முதல்நிலை பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம் – எதிர்மனுதாரர்

ஈரோடு மாவட்டம், கோபி தாலுகா, காசிபாளையம், 16/42 குப்பன் வீதி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. K.P. மணி என்பவரின் 19.02.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.02.2024 அன்று பெறப்பட்டு 15/பேரூ/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

ஈரோடு மாவட்டம், கோபி தாலுகா, காசிபாளையம், 16/42 குப்பன் வீதி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. K.P. மணி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் ரிடி, சத்தியமங்கலம் சப்ரிடி அலுவலக 28–06–2016 தேதிய செட்டில்மெண்ட் பத்திர பதிவு எண்.3801/2016 சத்தியமங்கலம் தாலுக்கா அரியப்பம்பாளையம் கிராமம் கரட்டூரில் எங்களுக்கு சொந்தமான புல எண்.274/5 கீழ்க்கண்ட,

கிழக்கு மேற்காக வடக்கில் 10.2 மீட்டர் (33.5 அடி)

கிழக்கு மேற்காக தெற்கில் 7.8 மீட்டர் (25.5 அடி)
தெற்கு வடக்காக கிழக்கில் 13.6 மீட்டர் (44.5 அடி)
தெற்கு வடக்காக மேற்கில் 14.6 மீட்டர் (48.0 அடி) இந்த அளவுகள் கொண்ட 1367 சதுரடி (பு.ஏ.0.03.14 செண்ட்) 127 சதுரமீட்டர் விஸ்தீரணமுள்ள மனையிடத்தினை அளந்து அத்துகாட்ட கோரி மனு செய்ததில், கிழபுறமாக 2 அடி அகலத்தில் பேரூராட்சி நிர்வாகம் கழிவுநீர்ப்பாதை அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதை புலப்பட அளவுகள் படி எங்களுக்கும் பக்கத்து புலதாரர்க்கும் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் முன்னிலையில் அளந்து அத்து காட்டப்பட்டது.

கழிவுநீர்ப்பாதையினால் எங்களுக்கும் எனது வீட்டிற்கும் பாதுகாப்பு இல்லையென்பதோடு மட்டுமில்லாமல் துர்நாற்றத்துடன் வசிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. இதனால் கொசுக்கள் உண்டாகி கொசுக்களினால் உண்டாகும் மலேரியா, டெங்கு, கோவிட் போன்ற கொடிய நோய்கள் பரவும் சூழ்நிலை உள்ளது என்பதால் இதை பேரூராட்சி நிர்வாகம் கூடிய விரைவில் சாக்கடையினை அப்புறப்படுத்த வேண்டும் என தெரியப்படுத்தி சுமார் 1 வருடங்களுக்கு மேலாகியும், இது வரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் இந்த மன்றத்தில் இந்த புகாரினைப் பதிவு செய்து சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்கள் மீது மேல்நடவடிக்கை எடுத்து கழிவுநீர் சாக்கடையினை எனது இடத்திலிருந்து அப்புறப்படுத்தி தர நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்."

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 18.07.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் அரியப்பம்பாளையம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. அரியப்பம்பாளையம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 25.10.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"திரு. கே.பி. மணி என்பவரின் மனுவில் அரியப்பம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட அரியப்பம்பாளையம் கிராமம், கரட்டூரில் ரீ.ச. எண்.274/5 ல் தனக்கு சொந்தமான இடத்தில் பேரூராட்சி வடிகால் செல்வதாகவும், அதனை அகற்றி மாற்றி அமைக்கவும் கோரி மனு அளித்துள்ளார்.

மேற்படி மனுவின் பேரில் இப்பேரூராட்சி பணியாளர்கள் கொண்டு நேரடி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்கள் மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அரியப்பம்பாளையம் பேரூராட்சி, அரியப்பம்பாளையம் கிராமம் , ரீ.ச. எண்.274/5 வார்டு எண்.06 கரட்டூரில் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் பேரூராட்சி மூலம் கட்டப்பட்ட வடிகால் மனுதாரருக்கு பாத்திய பட்ட இடத்தில் அமைந்துள்ளது ஊர்ஜீதம் செய்யப்பட்டது. இவ்வடிகால் கட்டப்பட்ட காலகட்டத்தில் அப்பகுதிகளில் வீடுகள் அதிகம் இல்லாத காரணத்தாலும், அறியாமையினாலும் மற்றும் மனுதாரரால் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்காத காரணத்தாலும் வடிகால் அமைந்துள்ள இடம் பேரூராட்சி இடம் என கருதி வடிகால் அமைக்கப்பட்டது என நேரடி ஆய்வில் கண்டறியப்பட்டது.

இருப்பினும் மனுதாரரின் கோரிக்கையின்படி, அரியப்பம்பாளையம் கிராமம், ரீ.ச. எண்.274/5ல் தனியருக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ள பேரூராட்சியின் வடிகாலில் வார்டு எண்.06 கரட்டூர் காந்தி வீதியிலிருந்து வரும் கழிவுநீர் சுப்பிரமணியர் வீதி வழியாக செல்வதால், மாற்று வழி கண்டறியும் பொருட்டு மனுதாரரின் குடியிருப்பு பின்புறம் உள்ள கோவில் வழியாக கழிவுநீர் கொண்டு செல்ல கோவில் நிர்வாகத்திடம் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் காந்தி வீதியிலிருந்து சுப்பிரமணியர் வீதிக்கு நீர் செல்ல ஏதுவாக கோவில் பகுதியில் மூடியுடன் கூடிய வடிகால் அமைக்கப்பட வேண்டியுள்ளதால், அரசு விதிமுறைகளுக்குட்பட்டு இம்மனுதாரரின் கோரிக்கையை முன்னுரிமைப்படுத்தி துரிதமாக செயல்பட்டு, உடன் வடிகாலை மாற்றி அமைக்கும் பொருட்டு மனுதாரரின் முன்னிலையில் வடிகாலை மாற்றி அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான அரியப்பம்பாளையம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 04.02.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. கே.பி. மணி என்பவர் 04.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், அரியப்பம்பாளையம் புல எண்.274/5ல் அமைந்துள்ள எங்களது மனையிடத்தில் கிழுபுறமாக 2 அடி அகலத்தில் அரியப்பம்பாளையம் பேரூராட்சியால் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு கழிவுநீர் பாதை அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது.
- கழிவுநீர் பாதையினால் துர்நாற்றம் வீசுவதோடு, கொசுக்கள் பெருகி, எங்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது.

எனவே எங்களது சொந்தமான இடத்தில் பேரூராட்சியால் ஆக்கிரமித்து அமைத்துள்ள கழிவுநீர் பாதையை அப்புறப்படுத்த ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான அரியப்பம்பாளையம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. D. குமார் என்பவர் 04.02.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார்:

- அரியப்பம்பாளையம் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 274/5ல் மனுதாரருக்கு சொந்தமான இடத்தில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு வடிகால் கட்டப்பட்டது என்பதை மனுதாரர் சமர்ப்பித்த ஆவணம் மற்றும் வருவாய்த் துறையின் ஆவணங்களின் மூலம் உறுதியாகியுள்ளது.
- மேற்படி இடத்தில் வடிகால் அமைக்கப்பட்ட கால கட்டத்தில் குடியிருப்புகள் அதிகம் இல்லாததாலும், மனுதாரர் எவ்வித ஆட்சேபணை தெரிவிக்காத சூழ்நிலையிலும் தவறுதலாக பேரூராட்சியால் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது.

- மனுதாரரின் சொந்தமான இடத்தில் அமைக்கப்பட்ட வடிகாலில் கழிவுநீரானது வார்டு எண்.6 கரட்டூர் காந்தி வீதிலிருந்து சுப்பிரமணியர் வீதிக்கு செல்கிறது. எனவே மாற்றுவழி கண்டறியும் பொருட்டு மனுதாரரின் குடியிருப்பிற்கு பின்புறம் உள்ள கோவில் வழியாக கழிவுநீர் கொண்டு செல்ல கோவில் நிர்வாகத்திடம் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டது. கோவில் நிருவாகம் இடம் தர மறுத்துள்ளது.
- இச்சூழ்நிலையில், தற்போது மனுதாரர் தனக்கு சொந்தமான வீட்டின் மேற்குப் பகுதியில் குழாய் மூலம் வடிகால் அமைத்துக் கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார் அவ்விடத்தில் தற்போதைய வடிகாலினை மாற்றியமைத்து மனுதாரரின் வீட்டின் மேற்கு புறத்தில் குழாய் மூலம் வடிகால் அமைத்திட உரிய தீர்மானம் நிறைவேற்றி விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இம்முறைமன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான அரியப்பம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

8. ஈரோடு மாவட்டம், காசிபாளையம் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. K.P. மணி என்பவர் தனது 19.02.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், அரியப்பம்பாளையம் கிராமம் கரட்டூரில் புல எண்.274/5ல் அமைந்துள்ள தங்களது மனையிடத்தில் கிழபுறமாக 2 அடி அகலத்தில் அரியப்பம்பாளையம் பேரூராட்சியால் கழிவுநீர் பாதை அமைத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. கழிவுநீர் பாதையினால் துர்நாற்றம் வீசுவதோடு, கொசுக்கள் பெருகி, எங்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது என புகாராக தெரிவித்துள்ளார். எனவே தங்களது சொந்தமான இடத்தில் ஆக்கிரமித்து அமைத்துள்ள கழிவுநீர் பாதையை அப்புறப்படுத்த ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

அரியப்பம்பாளையம் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட மனுதாரருக்கு சொந்தமான புல எண். 274/5 (கரட்டூர்)–ல் அமைந்துள்ள மனையிடத்தில் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் பேரூராட்சியால் சுமார் 2 அடி அகலத்தில் ஆக்கிரமிப்பு செய்து கழிவுநீர் பாதை அமைக்கப்பட்டுள்ளது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, அவரது வாக்குமூலம் மற்றும் மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக தெரிய வருகிறது. 20 வருடங்களுக்கு பின்னர், மனுதாரர் தனது 19.02.2024 நாளிட்ட முறையீட்டு மனு மூலமாக மேற்படி ஆக்கிரமிப்பினை அகற்றிட இம்முறைமன்ற நடுவத்தை கோரியுள்ளார்.

இந்நிலையில் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (c)–ன்படி முறையீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நிகழ்வு நடைபெற்ற தேதியிலிருந்து 5 ஆண்டுகள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள முறையீடு எதனையும் தொடர்பான பொருட்பாடுகளில் விசாரணை செய்யக்கூடாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:-

Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to:-

(a) xxx xxx

(b) xxx xxx

(c) any complaint filed after the expiry of five years from the date on which the occurrence is said to have taken place.

மேற்காணும் சூழ்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் நிகழ்வானது ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு (அதாவது 20 ஆண்டுகளுக்கு முன்பு) நடைபெற்றுள்ளதால் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (c)–ன்படி, மனுதாரரின் புகார் மனுவினை பரிசீலிக்க இயலாது என்பதால் இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறை நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்
1) திரு. K.P. மணி,
16/42 குப்பன் வீதி,
காசிபாளையம், கோபி தாலுக்கா,
ஈரோடு மாவட்டம் –638 454.
2) செயல் அலுவலர்,
அரியப்பம்பாளையம் முதல்நிலை பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்
3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032